# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2452/40- 2025 සැප්තැම්බර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.04

2452/40 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 24/1951 (XVII)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 151 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,
துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்,
அமைச்சர்.

கொழும்பு,
2025,செத்தெம்பர் 01 .

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மோட்டார் வாகன (போதைப் பொருட்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


103 - PG 7240- 454 (2025/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. (1) ஏதேனும் வீதியில் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துகின்ற, இயக்குகின்ற அல்லது மோட்டார் வாகனமொன்றின் உண்மையான பௌதிகக் கட்டுப்பாட்டிலிருக்கின்ற ஆளொருவர் அவுடதங்களை உட்கொண்டுள்ளார் என பொலிஸ் அலுவலரொருவர் நியாயமாக சந்தேகிக்குமிடத்து, அத்தகைய பொலிஸ் அலுவலர் அத்தகைய ஆளை மேலதிகப் பரிசோதனைக்காக அரசாங்க மருத்துவ அலுவலரிடம் அல்லது அவர் சார்பில் வைத்தியசாலையினால் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் முன்கொணர்தல் வேண்டும்.

(2) ஓராம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலரிடம் நியாமான சந்தேகமானது பொலிஸ் அலுவலரொருவர் பின்வருவனவற்றை அவதானிப்பின் எழலாம் -

(அ) அத்தகைய சாரதியின் ஏதேனும் வழமைக்குமாறான அல்லது சுட்டிக்காட்டத்தக்க தோல்சார் துலங்கல்கள் அல்லது அசாதாரணமான நடத்தை;

(அ) சாரதியின் பேச்சு, செயற்பாடு, அசைவு அல்லது சமநிலை;

(இ) போதைப் பொருட்கள் உட்கொண்டுள்ளமையைக் குறிப்பதாக சாரதியின் கண்களின் தோற்றம்;

(ஈ) போதைப் பொருட்கள் உட்கொண்டுள்ளமையைக் குறிக்கின்ற சாரதியின் போக்கு அல்லது சாரதியின் உடைந்த தோற்றம்;

(உ) நியாயமான தகவல் அல்லது போதைப் பொருட்கள் உட்கொண்டுள்ள சாரதிக்கு எதிரான முறைப்பாட்டின் அடிப்படையில் நடாத்தப்படும் புலனாய்வொன்றினூடாக; அல்லது

(ஊ) அதன் சார்பில் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட உபகரணம் ஒன்றினைப் பயன்படுத்துவதன்மூலம் நடாத்தப்படும் உமிழ்நீர் சோதனையினூடாக.

(3) இரண்டாம் உப ஒழுங்குவிதியின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள உமிழ்நீர் பரிசோதனைக்காக உமிழ்நீர் மாதிரியொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற எவரேனும் சாரதி, பொலிஸ் அலுவலரினால் வழங்கப்படும் நியாயமான ஒழுங்கேற்பாட்டின் கீழ் அத்தகைய மாதிரியை வழங்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்படுள்ளவாறாக அத்தகைய மாதிரியை வழங்குவதற்கு மறுக்கின்ற எவரேனும் சாரதி பரிசோதனைக்கு மிக விரைவானளவு மட்டும் விரைவில் அரசாங்க மருத்துவ அலுவலரொருவரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரிடம் முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) உமிழ்நீர் பரிசோதனையொன்று அதன் சார்பில் பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட உபகரணமொன்றினைப் பயன்படுத்துவதன் மூலம் பொலிஸ் நிலையத்தில் அல்லது வேறேதேனும் வசதியான இடத்தில் பொலிஸ் அலுவலரினால் நடாத்தப்படலாம்.

(6) உமிழ்நீர் பரிசோதனையொன்றினை நடாத்துகின்ற பொலிஸ் அலுவலரொருவர், உமிழ்நீர் பரிசோதனை நடாத்தப்படுகின்றது என்பதனை பொதுமக்கள் இலகுவில் அடையாளங்காணவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்கு நியாமாக எடுக்கக் கூடிய எல்லா அவசியமான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(7) ஆறாம் உப ஒழுங்குவிதியின்கீழ் பரிசோதித்தலின் மேல், சாரதி ஏதேனும் போதைப் பொருட்கள் அல்லது போதைப் பொருள்களின் கலவையை உட்கொண்டுள்ளாரென திருப்தியுறுகின்ற பொலிஸ் அலுவலர், மேலதிகப் பரிசீலனைக்காக இயலுமானவரை விரைவாக அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அரசாங்க வைத்தியசாலையொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரிடமும் முன்கொணருதல் வேண்டும்.

3. அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், 2 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் அல்லது (7) ஆம் உப ஒழுங்குவிதியின்கீழ் பொலிஸ் அலுவலரொருவரினால் அவருக்கு முன்னால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாரதியொருவருக்கான சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை முறைமையொன்றுக்கிணங்க பரிசோதனையொன்றை நடாத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சாரதி அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கோரப்பட்டவாறாக பரிசோதனை நடாத்துவதற்கு தேவைப்பட்ட இரத்தம், சிறுநீர், உமிழ்நீர் அல்லது வேறு குருதிசார் திரவங்களின் மாதிரியொன்றினை அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு வழங்குதல் வேண்டும்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அத்தகைய மாதிரியினை வழங்குவதற்கு மறுக்கின்ற எவரேனும் சாரதி (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் (1இ) ஆம் உட்பிரிவின் (உ) எனும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க கையாளப்படுதல் வேண்டும்.

5. மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழ் அவரால் நடாத்தப்படும் பரிசோதனையின் மேல், அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், ஆளொருவர் ஏதேனும் போதைப் பொருட்களை அல்லது போதைப் பொருட்களின் கலவையை உட்கொண்டிருந்துள்ளாரென ஆளொருவர் கண்டறிவாராயின், அவர் 7 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆய்வுகூட சோதனையின் முடிவுகளுக்கிணங்க இறுதி அறிக்கை வழங்கப்படும் வரையில், தொடர்புபட்ட சட்ட வழக்கு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் அலுவலருக்கு முதன்மை அறிக்கையொன்றினை வழங்குதல் வேண்டும்.

6. அத்தகைய ஆள் போதைப் பொருட்களை உட்கொண்டிருந்துள்ளாரென்பதனை 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் நடாத்தப்படும் பரிசோதனையொன்றினூடாக அவரால் கண்டறிய முடியாததாயின், அப்பயனுக்கான அறிக்கையானது பொலிஸ் அலுவலருக்கு அத்தகைய பரிசோதனையை முன்னெடுத்திருக்கும் அத்தகைய அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

7. ஆளொருவர் போதைப் பொருட்களை உட்கொண்டுள்ளாரென்பதனை 3 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டதான அரசாங்க அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் முன்னெடுக்கப்படும் பரிசோதனையில் கண்டறியப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆளிடமிருந்து எடுக்கப்படுகின்ற அத்தகைய இரத்தம், சிறுநீர், உமிழ்நீர் மற்றும் ஏனைய உடல் திரவத்தின் மாதிரியின் பகுதியொன்று அத்தகைய மாதிரியினைப் பரீட்சிப்பதற்கான அத்தகைய நோக்கத்துக்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவகமொன்றுக்கு அல்லது ஆய்வுகூடமொன்றுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

8. ஏழாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான மாதிரியின் மீது நடாத்தப்பட்ட ஆய்வுகூட பரிசோதனையின் பெறுபேறுகளைச் சோதித்ததன் பின்னர் அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிஸ் அலுவலரொருவருக்கு இறுதி அறிக்கையினை வழங்குதல் வேண்டும்.

9. சாரதியின் இரத்தம் சிறுநீர், உமிழ்நீர் அல்லது வேறு உடல் திரவத்திலிருந்து எடுக்கப்பட்ட மாதிரியில் ஏதேனும் போதைப் பொருட்களின் ஏதேனும் அளவைக் கொண்டுள்ளதென்பது அரசாங்க மருத்துவ அலுவலர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட இறுதி அறிக்கைக்கிணங்க அது நிலைநாட்டப்படின், அவர் போதைப்பொருட்களை உட்கொண்டிருந்துள்ளாரென கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக -

"போதைப் பொருட்கள்" என்பது, (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் "ஆ" என்னும் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் அவுடதங்கள் அத்துடன் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் அவுடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்ட முரணான வியாபாரத்துக்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் பாகம் I மற்றும் பாகம் II மற்றும் நான்காம் அட்டவணையின் பாகம் I, பாகம் II, பாகம் III மற்றும் பாகம் IV உட்பட போதையூட்டும் அவுடதங்கள் மற்றும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்கள் எனப் பொருள்படும்; அத்தடன்

"அரசாங்க மருத்துவ அலுவலர்" என்பது, இலங்கை மருத்துவப் பேரவையுடன் பதிவுசெய்யப்பட்டு மற்றும் இலங்கையினுள் ஏதேனும் அரசாங்க அல்லது அரசாங்கத்துடன் இணைந்த அல்லது நியதிச்சட்ட சபை நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள தகைமைபெற்ற மருத்துவ தொழிலர் ஒருவர் எனப் பொருள்படும்.

EOG 09 - 0053

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது